**லங்கா லேலன்ட் (பிறைவேட்) லிமிட்டட் - 2017/2018**

-----------------------------------------------------------------------------

லங்கா லேலன்ட் (பிறைவேட்) லிமிட்டட்டின் 2018 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2018 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென சபை நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கும் கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகள் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கம்பனியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. கம்பனியால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் கம்பனியால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்தச் சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

பணிப்பாளர் சபையின் தீர்மானங்கள் அல்லது ஏனைய பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகள் காணப்படாததால் 2018 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்ட ரூபா 9,800,924 தொகையான பொது ஒதுக்கத்தின் சரியான தன்மை தொடர்பாக உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.4 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கம்பனியின் 2018 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.1.1 விடயத்தை வலியுறுத்துதல்

ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டு கம்பனியின் வசம் தற்போது காணப்படாத இறையிலி காணி (freehold land) தொடர்பாக விபரிக்கின்ற நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்பு இல. 05 இன் மீது எனது கவனம் செலுத்தப்படுகின்றது.

### 2.1.2 ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாணரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 163(2) ஆம் பிரிவின் மூலம் வேண்டப்பட்டவாறு, நான் பின்வருவனவற்றைக் குறிப்பிடுகின்றேன்.

(அ) அபிப்பிராயத்திற்கான அடிப்படையும் கணக்காய்வின் நோக்கெல்லை மற்றும் வரையறைகளும் மேற்குறிப்பிடப்பட்டவாறு உள்ளன.

(ஆ) முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து; நான் அபிப்பிராயப்படுவதாவது:

- கணக்காய்விற்கு அவசியமான சகல தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என்பதுடன் இதுவரையான எனது பரீட்சிப்பின் மூலம் தென்படுகின்றவாறு முறையான கணக்கீட்டுப் பதிவேடுகள் கம்பனியால் பேணப்படுகின்றன என்பதும்,

- 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 151 ஆம் பிரிவின் தேவைப்பாடுகளுடன் கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் இணங்குகின்றன என்பதும் ஆகும்.

### 2.1.3 ஏனைய விடயங்கள்

2018 மார்ச் 31 இல் முடிவடைந்த காலப்பகுதிக்கான கம்பனியின் நிதிக்கூற்றுக்களில் ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தின் கீழ் குறிப்பிடப்பட்ட ரூபா 623,473 பெறுமதியான காணிகளை கம்பனி பெற்றிருந்த போதிலும் கம்பனி காணிகளை பயன்படுத்தியிருக்கவில்லை.

## 2.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானம் போன்றவற்றுடன் இணங்காமை

2003 யூன் 02 ஆம் திகதிய பிஈடி 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவின் பிரகாரம் நிதியாண்டு முடிவடைந்த பின்னர் 60 நாட்களினுள் வரைபு வருடாந்த அறிக்கை மற்றும் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் நிதிக்கூற்றுக்கள் 04 மாத தாமதத்தின் பின்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் வரைபு வருடாந்த அறிக்கை நிதிக்கூற்றுக்களுடன் சேர்த்து சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

# 3. நிதி மீளாய்வு

## 3.1 நிதி விளைவு

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவு ரூபா 68,086,266 பற்றாக்குறையொன்றாக காணப்பட்டதுடன் ஒப்பிடும் போது அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 647,811,976 ஆக காணப்பட்டது. அதற்கிணங்க நிதி விளைவுகளில் ரூபா 579,743,710 தொகையான முன்னேற்றமொன்று சுட்டிக்காட்டப்படுகின்றது. இணைக் கம்பனியின் முதலீட்டில் ரூபா 574,598,750 ஆல் நட்டம் ஏற்பட்டமை இம் முன்னேற்றத்திற்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

# 4. செயற்பாட்டு மீளாய்வு

## 4.1 செயலாற்றல்

கம்பனியானது நீண்ட காலப்பகுதியொன்றிற்கு செயற்பாட்டு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்காததுடன் மீளாய்வாண்டின் போது தலைவர் படி மற்றும் பணிப்பாளர் சபைக்கான படிகளாக ரூபா 3,852,367 தொகையும் எரிபொருள் செலவினங்களாக ரூபா 487,431 தொகையுமாக ரூபா 4,339,798 கூட்டுமொத்த தொகை மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்டிருந்தது.

**5.** **முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

| கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் | அவதானிப்புக்கள் |
| --- | --- |
| (அ) கணக்கீடு | நிதிக் கட்டுப்பாட்டாளரால் முறையான அங்கீகாரத்துடனான செயற்பாடுகளின்றி நாட்குறிப்புப் பதிவுகள் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் நாட்குறிப்பு பதிவுகள் தொடர்பான பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) மனித வளங்கள் அபிவிருத்தி | அங்கீகரிக்கப்பட்ட நிறுவனக் கட்டமைப்பு மற்றும் பதவியணியினரைக் கொண்டிருக்காமை. |